the work is entrusted to the Public Works Department. Will the Hon. Minister for Local Administration be pleased to see that all these works are entrusted to the Public Works Department rather than to the Panchayat Unions in the interest of efficient work?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, சில பெரிய ஏரிகளை பொதுப்பணித் துறையினர் மராமத்து செய்கிறார்கள். பாசன வசதி உள்ள ஆயக்கட்டு ஏரிகளை வருவாய்த் துறையினரும் மற்றும் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை ஊராட்சி ஒன்றியத்தினரும் மராமத்து செய்து வருகிறார்கள். இப்படி இருந்தாலும், பொது முக்கியத்துவத்தைக் கருதி, சில பாசனத் திட்டங்களை பொதுப்பணித் துறைக்கு மாற்ற வேண்டியிருந்தாலும் அவ்வாறு மாற்றுவதற்கு அரசாங்கம் யோசனை செய்துகொண்டிருக்கிறது.

வராக நதியின் குறுக்கே பாலம்

*351 வினா—திரு. நா. வெ. குருசாமி: மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், குள்ளப்புரத்தில் வராக நதியின் குறுக்கே ஓர் பாலம் கட்டும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இவ்வேலை ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் பரிசீலிக்கப்பட வேண்டியதாக உள்ளது.

திரு நா. வெ. குருசாமி: தலைவரவர்களே, இந்தப் பாலமானது கட்டப்பட்டால் ஆண்டிப்பட்டிப் பகுதியிலிருந்தும், வரிசநாடு மலைப்பகுதியிலிருந்தும் திண்டுக்கல் செல்லக்கூடிய மக்களுக்கு சுமார் 20 மைல் குறையும். ஆகவே, இந்தப் பாலத்தை விரைவில் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, இந்தப் பாலம் கட்டவேண்டிய இடம் வராக நதியில் மருதப்பட்டிக்கும் ஆண்டிப்பட்டிக்கும் இடையே கட்டப்பட வேண்டியது என்று கருதுகிறேன். அதற்குத் தோராயமாக ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டதில் 5 லட்சம் ரூபாய் செலவாகும் என்று பொறியாளர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதை இந்த வேலைத் திட்டத்தில்

சேர்த்துக்கொள்வதா வேறு வேலைத் திட்டத்தில் சேர்த்துக்கொள் கொள்வதா என்பதை அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது. இந்தத் திட்டத்தில் நிதி வசதி இல்லாததே அதற்குக் காரணம்.

திரு. நா. வெ. குருசாமி: மதுரை கோட்டப் பொறியாளர் அவர்கள் 28—8—1971 அன்று சுமார் 7,50,000 ரூபாய் இந்த வேலைத் திட்டத்திற்கு செலவாகும் என்று மதிப்பிட்டுள்ளார்கள். அந்த மதிப்பீட்டை மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரவர்களும் சிபாரிசு செய்திருக்கிறார்கள். ஆகவே, இந்தப் பாலத்தை உடனடியாகக் கட்டி முடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: ஏற்கெனவே மருதப் பட்டி-வாடிப்பட்டித் திட்டத்திற்கு 5 லட்சம் ரூபாயும், அதைப் போலவே குள்ளபுரம்-மருதப்பட்டித் திட்டத்திற்கு 3 லட்சம் ரூபாயும் ஆகுமென்று தனித்தனியாக பட்டியல் வெளியிடப்பட்டிருக்கிறது. அதையும் இந்த ஐந்தாண்டுத் திட்டத்தில் நிறைவேற்ற நிதி வசதி இல்லாததால் வேறு வேலைத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளலாமா என்று தலைமைப் பொறியாளர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார். அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

வேதாரண்யம் கால்வாயின் குறுக்கே பாலம்

*** 352 வினா—திரு. அ. இராசமாணிக்கம்**: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் வட்டம், கருவேலன்கடை கிராமத்திற்கருகில் வேதாரண்யம் கால்வாயின் குறுக்கே பாலமொன்று கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு அ. பெ. தர்மலிங்கம்: கருவேலங்கடை, வடக்கு பொய்கைநல்லூர் கிராம மக்களிடமிருந்து வந்த கோரிக்கையின் பேரில், நாகப்பட்டினம் தாலுகாவில் கருவேலங்கடை கிராமத்திற்கு அருகில் வேதாரண்யம் கால்வாயின்மேல் பாலம் கட்டுவது பற்றி தலைமைப் பொறியரின் ஆலோசனையை அறிந்து அரசாங்கத்தால் ஆராயப்பட்டது. இந்தப் பால வேலைக்கு சுமார் 1.25 இலட்சம் செலவாகும் என்று கூறப்பட்டது. அரசின் நிதி நிலைமையைக் கருத்தில் கொண்டு இந்தப் பால வேலையை வளமான காலம் வரும்வரை தள்ளிப் போடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.